# அவசரக் கூட்டம்

சோளிங்கர் தேர்வுநிலை பேரூராட்சியின் அவசரக்கூட்டம் 13.09.2021 ஆம் தேதி திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற உள்ளது. அது சமயம் கீழ்கண்ட கூட்டப்பொருள்கள் நிறைவேற்ற வேண்டி உள்ளதால் தனி அலுவலர் தலைமையில் நடைபெறும் கூட்ட நடவடிக்கைகள்

சோளிங்கர் தேர்வுநிலை பேரூராட்சி
நாள்.09.09.2021

தனி அலுவலர்
சோளிங்கர் பேரூராட்சி மற்றும்
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்
வேலூர் மண்டலம்.

<u>பொருள் எண்: 01</u>

சோளிங்கர் தேர்வுநிலை பேரூராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பணிபுரியும் மகளீர் சுய உதவிக்குழு மற்றும் ஆண்கள் சுய உதவிக்குழுவிற்கு 2021–2022–ம் (01.08.2021 முதல் 31.03.2022 வரை) ஆண்டிற்கு ஒரு நபருக்கு ஒரு நாளுக்கு கீழ்கண்டவாறு 09.09.2021 தேதி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள குழுவினை திடக்கழிவு மேலாண்மை திட்ட பராமரிக்க உத்தரவு வழங்க தனி அலுவலரின் பார்வைக்கும் அங்கீகாரத்திற்கும்.

| வ எண் | பணியின் விவரம் | ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | பணியாளர்களின் எண்ணிக்கை | நாள் ஒன்றுக்கு ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள தொகை | தகுதியான ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|
| 1 | திடக்கழிவு மேலாண்மை திட்டம் பராமரிக்க மகளீர் சுய உதவிக்குழு அமைத்தல் | ஆதி பராசக்தி மகளீர் சுய உதவிக்குழு | 20 | ரூ.310/– | ஆதி பராசக்தி மகளீர் சுய உதவிக்குழு |
| | | செம்பருத்தி மகளீர் சுய உதவிக்குழு | 20 | ரூ.330/– | |
| | | ரோஜா மகளீர் சுய உதவிக்குழு | 20 | ரூ.310/– | ரோஜா மகளீர் சுய உதவிக்குழு |
| | | அல்லி மகளீர் சுய உதவிக்குழு | 20 | ரூ.340/– | |
| 2 | திடக்கழிவு மேலாண்மை திட்டம் பராமரிக்க ஆண்கள் சுய உதவிக்குழு அமைத்தல் | டாக்டர் அப்துல் கலாம் ஆண்கள் சுய உதவிக்குழு | 20 | ரூ.310/– | டாக்டர் அப்துல் கலாம் ஆண்கள் சுய உதவிக்குழு |
| | | சுபாஷ் ஆண்கள் சுய உதவிக்குழு | 20 | ரூ.350/– | |

<u>செயல் அலுவலர் குறிப்பு</u>

சோளிங்கர் பேரூராட்சியின் 18 வார்டுகள், 236 தெருக்கள் கொண்ட நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ள பேரூராட்சியாகும். இப்பேரூராட்சியில் தற்போது சுமார் 35000 மக்கள் தொகை கொண்டதாகும். 9.5 கீ.மீ பரப்பளவில் 9570 குடியிருப்புகளும், வணிக நிறுவனங்களும், தொழிற்சாலைகளும் கொண்டுள்ளது. சோளிங்கர் பேரூராட்சியில் குப்பைகளை வீடு வீடாக சென்று பிரிப்பதற்கு 150 வீடுகளுக்கு ஒரு நபர் என்ற விகிதத்தில் சுமார் 9570 குடியிருப்புகளுக்கு மொத்தம் 64 நபர்கள் தேவைப்படுகிறது. தெருக்களை சுத்தம் செய்வதற்கும் மற்றும் கழிவுநீர் கால்வாய்யை சுத்தம் செய்வதற்கு 30 நபர்கள் தேவைப்படுகிறது. மொத்தம் 94 நபர்களுக்கு பேரூராட்சியில் நிரந்தர தூய்மை பணியாளர்கள் மொத்தம் 30 நபர்கள் உள்ளனர். மீதம் 64 நபர்கள் தேவைப்படுகிறார்கள். இப்பேரூராட்சியில் தினசரி சேகரமாகும் குப்பைகளை கையாள்வதில் பேரூராட்சி பணியாளர்களை கொண்டு செய்வது சிரமமாக உள்ளது. எனவே ஆண்கள் சுய உதவிக்குழு, மகளீர் சுய உதவிக்குழு மூலம் திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகள் தொடர்ந்து ஒப்பந்தபுள்ளி அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தினக்கூலி அடிப்படையில் கடித எண். RC.F4/4406/2021 Dt.11.06.2021–ன் படி ரூ.340/– உள்ளது. இதில் குறைந்த தினக்கூலியாகரூ.310/– சுய உதவிக்குழு பணியாளர்களுக்கு அளிக்கப்படுகிறது. இக்குழுக்களுக்கு வருடா வருடம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி, பணிகளின்

செயல்திறன் மற்றும் மன்றத்தின் ஒப்புதல் அடிப்படையில் பணி உத்திரவு வழங்கப்படும்.

திடக்கழிவு பணியாளர்களுக்கு மாதா மாதம் ஊதியம் அளிப்பதற்கு போதுமான பொது நிதி பேரூராட்சியில் இருப்பு உள்ளனெதவும், திடக்கழிவு மேலாண்மை திட்டத்தால் சென்ற ஆண்டு ரூ.104500/– வருமானம் வரப்பெற்றது.

01.04.2021–ல் சட்ட மன்ற தேர்தல் நன்னடத்தை விதிகள் அமுலில் இருந்ததால் ஒப்பந்தப்புள்ளி கோர இயலவில்லை. மேலும் கோவிட் 19 முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாலும் பொது மக்களின் அன்றாட பொது சுகாதாரம் பாதிக்காத வகையில் பேரூராட்சியில் திடக்கழிவு குழுக்கள் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

<u>பொருள் எண்.02</u>

சோளிங்கர் தேர்வுநிலை பேரூராட்சி எல்லைக்குட்பட்ட காமராஜர் நகர் பகுதியில் SDRF 2018-19-ம் ஆண்டு திட்டத்தின் கீழ் சோளிங்கர் ஏரியில் திறந்தவெளி கிணறு அமைத்து கொண்டபாளையம் மேல் நீர் தேக்க தொட்டியில் குடிநீர் ஏற்றி அப்பகுதி பொதுமக்களுக்கு குடிநீர் வினியோகம் செய்ய புதியதாக பைப் லைன் அமைக்க காமராஜ் நகர் பகுதியிலுள்ள சிமெண்ட் சாலையினை JCB மூலம் பள்ளம் எடுத்து பைப் லைன் அமைக்கப்பட்டது. இதனால் அப்பகுதியில் உள்ள சிமெண்ட் சாலை ஒரு பாதி சிமெண்ட் சாலையாகவும் மறு பாதி மணல் சாலையாக மூடப்பட்டுள்ளதால் பொது மக்கள் போக்குவரத்துக்கு மிகவும் பாதிக்கும் நிலை உள்ளது என வார்டு எண்.10, காமராஜ் நகர் 1 முதல் 8 தெருக்களில் உள்ள சுமார்.1036 மக்கள் தொகை கொண்ட பகுதியாகும். அப்பகுதியில் வாழும் பொது மக்கள் தினமலர் செய்திதாளில் நாள்.07.09.2021–ம் தேதியில் கோரிக்கை வைத்ததின் பேரில் புதியதாக சிமெண்ட் சாலை அமைக்க இளநிலை பொறியாளர், சோளிங்கர் பேரூராட்சி (தலைமையிடம்) அவர்களிடம் ரூபாய்.9.00 இலட்சம் மதிப்பீடு பெறப்பட்டுள்ளது. மதிப்பீட்டு தொகைக்கு பேரூராட்சி பொது நிதியில் இருந்து பணி மேற்கொள்ள தனி அலுவலரின் பார்வைக்கும் அங்கீகாரத்திற்கும் வைத்தல்.

பொருள் எண்.03

அ) சோளிங்கர் தேர்வுநிலை பேரூராட்சியில் மொத்தம் 18 வார்டுகளை உள்ளடக்கி 9.500 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட 18 வார்டுகளை உள்ளடக்கிய தேர்வு நிலை பேரூராட்சி ஆகும். இப்பேரூராட்சியின் 2011 ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 30856 ஆகும் தற்போது சாராசரி மக்கள் தொகை 34854 ஆகும். இப்பேரூராட்சியில் மொத்தம் 236 தெருக்கள் உள்ளது. அவற்றில் சிமெண்ட் சாலை 27.163 கிலோ மீட்டரும், தார்சாலை 5.049 கிலோ மீட்டரும், மண்சாலை 5.798 கிலோ மீட்டரும் ஆக மொத்தம் 38.010 கிலோ மீட்டர் சாலைகள் உள்ளன.

மேலும் 38.69 கிலோ மீட்டர் நீளத்திற்கு வடிகால்வாய்கள் உள்ளன. இப்பேரூராட்சியில் சுமார் 13.89 கி.மீ நீளத்திற்கு மாநில நெடுஞ்சாலை உள்ளது. அன்றாடம் உருவாகும் குப்பைகளை மக்கும் குப்பை, மக்காத குப்பை என தரம் பிரித்து வளம்மீட்பு பூங்காவிற்கு எடுத்து சென்று உரமாக்கிட திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு கீழ்கண்ட விவரப்படி மினி லாரி -1, டிராக்டர் - 2, மினி வேன்–1 பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

| | | |
|---|---|---|
| 1 | வ.எண். | 1 – மினி லாரி |
| 2 | பேரூராட்சியின் பெயர் மற்றும் நிலை | சோளிங்கர் பேரூராட்சி<br>தேர்வுநிலை |
| 3 | வார்டு எண்ணிக்கை | 18 |
| 4 | 2011ம் ஆண்டிற்கான மக்கள் தொகை மற்றும் | 2011ம் ஆண்டு மக்கட் தொகை – 30856 |

| | | |
|---|---|---|
| | தற்போதைய மக்கள் தொகை | தற்போதைய மக்கள் தொகை–34854 |
| 5 | பயன்பாட்டிலுள்ள வாகனத்தின் பெயர், பதிவு எண் மற்றும் பதிவு விவரம் (நகல் இணைக்கப்பட வேண்டும்) | மினி டிப்பர் லாரி<br>TN - 23 D 6570 |
| 6 | வாகனம் எந்த ஆண்டு வாங்கப்பட்டது. எந்த நிதியின் கீழ் வாங்கப்பட்டது. (ஆணையின் நகல் இணைக்கப்பட வேண்டும்) | ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் 2011–12ம் ஆண்டு வாங்கப்பட்டது |
| 7 | கடைசியாக வாகனம் எந்த ஆண்டு தகுதி சான்று பெறப்பட்டது என்ற விவரம் (நகல் இணைக்கப்பட வேண்டும்) | 2016–ம் ஆண்டு தகுதி சான்று பெறப்பட்டுள்ளது |
| 8 | தினசரி சேகராமாகும் கழிவுகள் விவரம் | 9.89 மெட்ரிக் டன்னில்<br>மக்கும் குப்கைள் – 5.14 டன்<br>மக்காத குப்பை – 3.52 டன்<br>Inert and Silt - 1.23 டன். |

| | | |
|---|---|---|
| 1 | வ.எண். | 2– டிராட்க்டர் |
| 2 | பேரூராட்சியின் பெயர் மற்றும் நிலை | சோளிங்கர் பேரூராட்சி<br>தேர்வுநிலை |
| 3 | வார்டு எண்ணிக்கை | 18 |
| 4 | 2011ம் ஆண்டிற்கான மக்கள் தொகை மற்றும் தற்போதைய மக்கள் தொகை | 2011ம் ஆண்டு மக்கட் தொகை – 30856<br>தற்போதைய மக்கள் தொகை–34854 |
| 5 | பயன்பாட்டிலுள்ள வாகனத்தின் பெயர், பதிவு எண் மற்றும் பதிவு விவரம் (நகல் இணைக்கப்பட வேண்டும்) | டிரெய்லருடன் கூடிய டிராக்டர் – 2<br>TN - 23 D 1992<br>TN - 23 D 3593 |
| 6 | வாகனம் எந்த ஆண்டு வாங்கப்பட்டது. எந்த நிதியின் கீழ் வாங்கப்பட்டது. (ஆணையின் நகல் இணைக்கப்பட வேண்டும்) | |
| 7 | கடைசியாக வாகனம் எந்த ஆண்டு தகுதி சான்று பெறப்பட்டது என்ற விவரம் (நகல் இணைக்கப்பட வேண்டும்) | 2018ம் ஆண்டு தகுதி சான்று பெறப்பட்டுள்ளது |
| 8 | தினசரி சேகராமாகும் கழிவுகள் விவரம் | 9.89 மெட்ரிக் டன்னில்<br>மக்கும் குப்கைள் – 5.14 டன்<br>மக்காத குப்பை – 3.52 டன்<br>Inert and Silt - 1.23 டன். |

| | | |
|---|---|---|
| 1 | வ.எண். | 1 – மினி வேன் |
| 2 | பேரூராட்சியின் பெயர் மற்றும் நிலை | சோளிங்கர் பேரூராட்சி<br><br>தேர்வுநிலை |
| 3 | வார்டு எண்ணிக்கை | 18 |
| 4 | 2011ம் ஆண்டிற்கான மக்கள் தொகை மற்றும் தற்போதைய மக்கள் தொகை | 2011ம் ஆண்டு மக்கட் தொகை – 30856<br><br>தற்போதைய மக்கள் தொகை–34854 |
| 5 | பயன்பாட்டிலுள்ள வாகனத்தின் பெயர், பதிவு எண் மற்றும் பதிவு விவரம் (நகல் இணைக்கப்பட வேண்டும்) | மினி வேன்<br><br>TN - 73 D 6570 |
| 6 | வாகனம் எந்த ஆண்டு வாங்கப்பட்டது. எந்த நிதியின் கீழ் வாங்கப்பட்டது. (ஆணையின் நகல் இணைக்கப்பட வேண்டும்) | SWM திட்டம் 2015–16ம் ஆண்டு வாங்கப்பட்டது |
| 7 | கடைசியாக வாகனம் எந்த ஆண்டு தகுதி சான்று பெறப்பட்டது என்ற விவரம் (நகல் இணைக்கப்பட வேண்டும்) | 2016ம் ஆண்டு தகுதி சான்று பெறப்பட்டுள்ளது |
| 8 | தினசரி சேகராமாகும் கழிவுகள் விவரம் | 9.89 மெட்ரிக் டன்னில்<br><br>மக்கும் குப்கைள் – 5.14 டன்<br><br>மக்காத குப்பை – 3.52 டன்<br><br>Inert and Silt - 1.23 டன். |

அரசாணை (நிலை) எண்.225 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.12.09.1997–ன் படி பேரூராட்சி மன்றங்களிடமிருந்து செயல் குறிப்பாணை பெற்ற ஒரு மோட்டார் வாகனத்திற்கு ஒரு ஒட்டுநர் பணியிடம் வீதம் தோற்றுவித்துக்கொள்ள பேரூராட்சிகளின் ஆணையர் அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது பேரிலும் பேரூராட்சிகளின் ஆணையர் அவர்களின் கடித ந.க.எண்.7336/2021/அ3 நாள் 13.07.2021ன் படியும் இப்பேரூராட்சியில் உள்ள இரண்டு இழுவை (டிராக்டர்) வாகனத்திற்கு 1 ஒட்டுநர் பணியிடம் தோற்றுவிக்க்பப்பட்டுள்ளது. மீதம் உள்ள மற்றொரு இழவை வாகனத்திற்கு 1 பணிடமும், மினிலாரி வாகனத்திற்கு 1 ஒட்டுநர் பணியிடம், மற்றும் மினி வேன் வாகனத்திற்கு 1 ஒட்டுநர் பணியிடம் என 3 ஒட்டுநர் நிரந்தர பணியிடம் தோற்றுவிக்க வேண்டி அரசுக்கு கருத்துரு அனுப்பிட மன்றத்தின் அனுமதிக்கு.

செயல் அலுவலர் குறிப்பு

ராணிப்பேட்டை மாவட்டம், சோளிங்கர் பேரூராட்சியானது வேலூர் – திருத்தணி தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள நகரமாகும். இப்பேரூராட்சிக்கு சுற்றுப்புற கிராமங்களில் இருந்து இந்நகருக்கு அதிகளவில் மக்கள் குடிபெயர்ந்து வருவதால் புதியதாக விரிவாக்க பகுதிகள் உருவாகி உள்ளது. திடக்கழிவு மேலாண்மை பணிகள் திறம்பட செய்திட ஏதுவாக இப்பேரூராட்சியில் மினி லாரி–1, இழுவை டிராக்டர் வாகனம்– 2, மற்றும் மினி வேன்–1 ஆக மொத்தம் நான்கு வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதில்

இழுவை ஒட்டுநர் பணியிடம் ஒன்று ஏற்கனவே தோற்றுவிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள மூன்று வாகனங்களை ஒட்டுநர் பயிற்சி பெற்றுள்ள பேரூராட்சி தூய்மை பணியாளர்களை கொண்டு இயக்கப்பட்டு வருகின்றன. ஒப்பந்த அடிப்படையிலும், தொடர் அனுமதி ஊதியத்திலும், பணியாளர் எவரும் பணிபுரியவில்லை. பேரூராட்சியில் மீதம் உள்ள ஒரு இழுவை வாகனத்திற்கு 1 பணிடமும், மினிலாரி வாகனத்திற்கு 1 ஓட்டுநர் பணியிடம், மற்றும் மினி வேன் வாகனத்திற்கு 1 ஒட்டுநர் பணியிடம் என 3 ஒட்டுநர் நிரந்தர பணியிடம் தோற்றுவிக்க அரசு விதிமுறைகளின்படியும் நிரந்தர பணியிடம் அனுமதிக்கப்பட்டால் பணியாளர்களின் ஊதியம் செலவினம் 49 சதவீதத்திற்கு மிகாமல் உள்ளது. அரசாணை (நிலை) எண்.225 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.12.09.1997ன் படியும் அவசியத்தை முன்னிட்டு புதியதாக 3 எண்ணிக்கை ஒட்டுநர் நிரந்தர பணியிடம் தோற்றுவிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

தனி அலுவலர்
சோளிங்கர் பேரூராட்சி மற்றும்
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்
வேலூர் மண்டலம்

# சாதாரணக் கூட்டம்

சோளிங்கர் தேர்வுநிலை பேரூராட்சியின் சாதாரணக்கூட்டம் .09.2021 ஆம் தேதி . கிழமை பகல் மணியளவில் நடைபெற உள்ளது. அது சமயம் கீழ்கண்ட கூட்டப்பொருள்கள் நிறைவேற்ற வேண்டி உள்ளதால் தனி அலுவலர் தலைமையில் நடைபெறும் கூட்ட நடவடிக்கைகள்

சோளிங்கர் தேர்வுநிலை பேரூராட்சி
நாள். .09.2021

தனி அலுவலர்
சோளிங்கர் பேரூராட்சி மற்றும்
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்
வேலூர் மண்டலம்.

**பொருள் எண்: 01**

சோளிங்கர் தேர்வுநிலை பேரூராட்சியில் ஆகஸ்ட் – 2021 மாதம் வரை நிகழ்ந்த பிறப்பு, இறப்பு மற்றும் இறந்து பிறந்தவை பதிவு செய்தது தனி அலுவலர் பார்வைக்கு வைத்தல்

| மாதம் | பிறப்பு | | | இறப்பு | | | இறந்து பிறந்தவை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| ஆகஸ்ட் – 2021 | 2 | 6 | 8 | 14 | 7 | 21 | – | – | – |

**பொருள் எண். 02**

இராணிப்பேட்டை மாவட்டம், சோளிங்கர் தேர்வுநிலை பேரூராட்சியில் ஆகஸ்ட் – 2021 மாத வரவுகள் தனி அலுவலர் பார்வைக்கு வைத்தல்.

| வ. எண் | வரி இனங்கள் விவரம் | ஆகஸ்ட் – 2021 |
|---|---|---|
| 1 | சொத்து வரி நிலுவை வசூல் | 8935 |
| 2 | சொத்து வரி நடப்பு வசூல் | 90359 |
| 3 | நூலக வரி நிலுவை வசூல் | 905 |
| 4 | நூலக வரி நடப்பு வசூல் | 9107 |
| 5 | தொழில் வரி வசூல் | 7900 |
| 6 | குடிநீர் கட்டணம் நிலுவை வசூல் | 44160 |
| 7 | குடிநீர் கட்டணம் நடப்பு வசூல் | 102900 |
| 8 | பல வகை பட்ட கட்டணம் நிலுவை வசூல் | 27384 |
| 9 | பல வகை பட்ட கட்டணம் நடப்பு வசூல் | 26200 |
| 10 | இதர வரவினங்கள் | 1043134 |

**பொருள் எண்.03**

சோளிங்கர் தேர்வுநிலை பேரூராட்சி எல்லைக்குட்பட்ட குட்டை தெரு கதவு எண்.45–ல் வசிக்கும் திரு.அ.தமிழரசன் த/பெ.அ.அசோகன், என்பவர் பேரூராட்சியில் ஒப்பந்ததாரராக பதிவு செய்ய கோரி வரப்பெற்றுள்ள மனு பேரூராட்சி மன்ற தனி அலுவலர் அவர்களின் பார்வைக்கும் அங்கீகாரத்திற்கும் வைத்தல்

<u>செயல் அலுவலர் குறிப்பு</u>

மனுதாரரின் சொத்துக்கள் ரூ.1.00 கோடிக்கு ஆர்.கே.பேட்டை வட்டாட்சியர் அவர்களால் 29.07.2021–ல் சொத்து மதிப்பு சான்று வழங்கப்பட்டுள்ளது, சொத்துக்கள் சம்மந்தமான வில்லங்க சான்று 09.07.2021 வரை பெறப்பட்டுள்ளது, வருமான வரி துறையின் மூலம் 2020–21–ம் ஆண்டிற்கான வருமான சான்று, வணிக வரி துறையில் 22.05.2020–ல் பதிவு செய்து சான்று பெற்றுள்ளார், எனவே மனுதாரரின் அனைத்து ஆவணங்களின் அடிப்படையில் பேரூராட்சியில் ஒப்பந்ததராக பதிவு செய்யலாம்.

**<u>பொருள் எண்.04</u>**

இராணிப்பேட்டை மாவட்டம் சோளிங்கர் தேர்வுநிலை பேரூராட்சியில் ஆகஸ்ட் – 2021 மாத செலவினங்கள் செலவு சீட்டு எண்.423 முதல் 503 வரை தனி அலுவலர் பார்வைக்கும் அங்கீகாரத்திற்கும்.

**தனி அலுவலர்**
**சோளிங்கர் பேரூராட்சி மற்றும்**
**பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்**
**வேலூர் மண்டலம்**